செ.வெ.எண்: 3 நாள்:01.08.2016

புதுக்கோட்டை டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி நினைவு அரசு மருத்துவமனையில் உள்ள 108 அவசர மருத்துவ முதலுதவி இருசக்கர வாகனத்தின் செயல்பாடுகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி நினைவு அரசு மருத்துவமனையில் உள்ள 108 அவசர மருத்துவ முதலுதவி இருசக்கர வாகனங்களின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் 31.07.2016 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த 108 அவசர மருத்துவ முதலுதவி இருசக்கர வாகனத்தின் செயல்பாடுகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள்ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகம் முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு 108 ஆம்புலன்ஸ் செல்ல முடியாத இடங்களுக்கு உடனடியாக சென்று விபத்து மற்றும் அவசர சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கும் வகையில் 108 அவசர மருத்துவ முதலுதவி இருசக்கர வாகனங்களை வழங்கி உள்ளார்கள்.

அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி நினைவு அரசு மருத்துவமனைக்கு வழங்கப்பட்ட 2 எண்ணிக்கையிலான 108 அவசர மருத்துவ முதலுதவி இருசக்கர வாகனங்களின் செயல்பாடுகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வின் போது முதலுதவி இருசக்கர வாகனத்தின் செயல்பாடுகள், ஊழியர்களின் பணித்திறன், மருத்துவ உபகரணங்கள், அவசர காலங்களில் வழங்கப்பட்ட சிகிச்சை விபரம் போன்ற பல்வேறு விபரங்கள் கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் இந்த 108 அவசர மருத்துவ முதலுதவி இருசக்கர வாகனம் விபத்து மற்றும் அவசர காலங்களில் ஆம்புலன்ஸ் போக முடியாத குறுகிய பாதை, மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடங்களுக்கு ஆம்புலன்ஸ் செல்வதற்கு முன்பாக சென்று பாதிக்கப்பட்ட நபர்களுக்கு முதலுதவி சிகிச்சைகள் அளித்து அவர்களை உடனடியாக ஆம்புலன்சில் அனுப்பி வைக்கும் பணியினை மேற்கொள்ளும். இதில் ஒரு அவசர மருத்துவ தொழில்நுட்பாளர் பொதுமக்களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்வார். இந்த வாகனத்தில் பொதுமக்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கும் வகையில் அவசர காலங்களுக்கு தேவைப்படும் அடிப்படை மருந்து, மாத்திரைகள், ஊசிகள், நாடித்துடிப்பு, இரத்த அழுத்தம் பரிசோதிக்கும் உபகரணம், காயத்திற்கு போடும் கட்டுத்துணிகள் போன்ற பல்வேறு உயிர்காக்கும் சாதனங்கள் அடங்கிய பெட்டகம் உள்ளது. எனவே அனைத்து பொதுமக்களும் அவசர காலங்களில் 108 அவசர மருத்துவ முதலுதவி வாகனங்களை உரிய முறையில் தொடர்பு கொண்டு பயன்பெறுவதுடன் பொதுமக்களிடமிருந்து தகவல் வந்தவுடன் விரைவாக விபத்து நடைபெற்ற இடத்திற்கு சென்று சிறப்பான சிகிச்சை அளிக்க சம்மந்தப்பட்ட மருத்துவ அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

பின்னர் புதுக்கோட்டை நகராட்சி, திருவப்பூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோவிலில் நடைபெற்று வரும் தங்கரதம் செய்யும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் அவர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டார்கள். மேலும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் தங்கரதம் செய்யும் பணிகளுக்கு அருள்மிகு முத்துமாரியம்மன் அறக்கட்டளைக்கு ரூ.5 இலட்சம் மதிப்பில் நன்கொடை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, நகர்மன்றத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், இணை இயக்குநர் (பொது சுகாதாரம்) (பொ) மரு.சையதுமொய்தீன், நகர்மன்ற உறுப்பினர்கள் திரு.பாஸ்கர், திருமதி.மலர்விழிமுத்து, திரு.ராமதாஸ் உள்ளிட்ட பல்வேறு நகர்மன்ற உறுப்பினர்கள், நகர கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.மாரிமுத்து, அருள்மிகு முத்துமாரியம்மன் அறக்கட்டளை தலைவர் திரு.வைரவன், செயலாளர் திரு.பி.வி.ஆர்.சேகரன், பொருளாளர் திரு.ப.கணேசன், ஆலய மேற்பார்வையாளர் திரு.சேதுராமன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.